PR/2019/16/T

# ஜப்பான் தூதரகம்


இல .20, ஸ்ரீமத் ஆர்.ஜி .சேனானாயக்க மாவத்த, கொழும்பு 7, இலங்கை

தொலைபேசி :94-11-269-3831~3 தொலைநகல் : 94-11-269-8629

மின்னஞ்சல் :cultujpn@sltnet.lk


**மார்ச் 19, 2019**

## ஊடக அறிக்கை

### யாழ்ப்பாணத்திற்கு கழிவு சேகரிப்பு ட்ரக் வண்டிகளை ஜப்பான் வழங்கவுள்ளது

ஜப்பானிய அரசாங்கம், யாழ்ப்பாணத்தில் கழிவு அகற்றும் நடவடிக்கைகளுக்காக மீள்புதுப்பிக்கப்பட்ட ட்ரக் வண்டிகளை பெற்றுத்தர 83,432 அமெரிக்க டொலர்களை ( கிட்டத்தட்ட 15 மில்லியன் ரூபா) வழங்கியுள்ளது. அடித்தட்டு மக்களின் பாதுகாப்புத் திட்டங்களுக்கான மானிய உதவித்திட்டத்தினூடாகவே இந்த நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அகிரா சுகியாமா மற்றும் யாழ் மாநகர மேயர் இம்மானுவேல் ஆர்னோல்ட் ஆகியோரினால் கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதுவரின் வாசஸ்தலத்தில் 2019 மார்ச் 19ம்திகதி அன்று கைச்சாத்திடப்பட்டது.

சுகாதாரமான சூழலை மேம்படுத்துவதற்காக இந்த திட்டத்தினூடாக ஜப்பானிடமிருந்து யாழ் மாநகர சபை நான்கு கழிவு சேகரிப்பு ட்ரக் வண்டிகளைப் பெற்றுக்கொள்ளும். மீள்புதுப்பிக்கப்பட்ட இந்த ட்ரக் வண்டிகளை ஜப்பானில் இருந்து இலங்கைக்கு அன்பளிப்புச் செய்கின்ற இந்த நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் பணிகளை ஜப்பானிய இராஜதந்திரத்தினை ஊக்குவிப்பதற்கான (SPJD) சங்கம் முன்னெடுக்கும்.

துரித பொருளாதார மற்றும் சனத்தொகை வளர்ச்சியைக் கண்டுவரும் யாழ்ப்பாண மாநகரத்தில் தினமும் 70மில்லியன் தொன் திண்ம கழிவுகள் சேர்கின்றன. இருந்தபோதிலும் கழிவுகளைச் சேகரிக்கும் ட்ரக் வண்டிகளின் பற்றாக்குறை காரணமாக 20 மில்லியன் தொன்கள் அளவிலான கழிவுகள் முறையாக சேகரிக்கப்படாமல் உள்ளன. இதனால் யாழ் மாநகர பகுதியின் சுற்றாடலும் பொதுச் சுகாதாரமும் கடுமையாகப் பாதிப்புறுகின்றன. யாழ் மாநகர சபையின் கழிவு சேகரிப்பு திறனை மேம்படுத்துவதன் மூலமாக இந்த அவசரத் தேவைக்கு தீர்வுகாண இந்தத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த மானிய உதவி வழங்கப்பட்டமை தொடர்பாக கருத்துவெளியிட்ட யாழ் மாநகர மேயர் இம்மானுவேல் ஆர்னோல்ட் “இந்த மானிய ஒப்பந்தத்தில் பெரு மகிழ்ச்சியுடனும் சிறப்புரிமையுடனும் யாழ் மக்களின் சார்பாக கைச்சாத்திடுகின்றேன். நான்கு கழிவு சேகரிப்பு ட்ரக்

வண்டிகள் வழங்கும் பெருமனத்துடனான மானிய உதவிக்காக யாழ் மாநகர மேயர் என்றவகையில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். யாழ் நகரை தூய்மையாகவும் நேர்த்தியாகவும் வைத்துக்கொள்வதற்கு யாழ் மக்களுக்கு சரியான நேரத்தில் மிகுந்த பயன்மிக்கதான இந்த அன்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. மூன்று தசாப்தகாலமாக நீடித்த உள்நாட்டு யுத்தமானது யாழ் மக்களுக்கு கடுமையான கஷ்டங்களைக் கொடுத்திருந்தது. இருந்தபோதிலும் யுத்தம் ஓய்ந்தபின்னர் இது குறைவடைந்துள்ளதுடன் அரசாங்கம் மற்றும் வெளிநாடுகளின் ஒத்துழைப்புடன் குறிப்பிடத்தக்க அபிவிருத்திகள் இடம்பெற்றுவருகின்றன. இந்த நான்கு ட்ரக் வண்டிகளும் ஏற்கனவேயுள்ள எமது வாகனங்களுடன் இணைந்துகொள்ளும் போது கழிவகற்றும் எமது செயற்பாடு முன்னேற்றம் காணும். இந்த வாகனங்களை நாம் பெருமளவில் பயனடையத்தக்கவகையில் உபயோகிப்போம் என நான் ஜப்பானிய அரசாங்கத்திற்கு உறுதியளிக்கின்றேன். எதிர்காலத்தில் ஜப்பானிடம் இருந்து மேலும் உதவிகளை எதிர்பார்த்திருக்கின்றோம்.''

**(முற்றும்)**

*****************************************************************

**மேலதிக விபரங்களுக்கு பொருளாதார மற்றும் அபிவிருத்தி கூட்டுறவுப் பிரிவினருடன் தொடர்புகொள்க.**

Tel: 011-269-3831~3 (ext.225)